பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 17 ஞாயிற்றுக்கிழமை 03.12.2023 கதிர் 387

## இனி இது ரகசியம் அல்ல!

கடந்தவாரத்தில்விளையாட்டுத்துறை அமைச்சர்ரெஷான்அந்தப்பதவியில் இருந்து நீக்கப்பட்டார். ரணிலின் ஆட்சிக்குள் இருந்தபடி அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய தனிமனிதனான அவர், தனது செயல்களால் எந்த நேரத்திலும் தனக்குஅந்தக்கதிநேரும்என்பதைத் தெரிந்துகொண்டேதான் அந்தப் போராட்டத்தில் இறங்கினார் என்பதால், தனது அடுத்தகட்ட அரசியல் நடவடிக்கைகளைக் கொண்டு செல்வதில் தொடர்ந்தும் தெளிவாகவே இருக்கிறார் என்று சொல்லப்படுகின்றது.

கிடைத்த தகவலின்படி, ரொஷான் தனது அமைச்சுப் பதவியை இழந்தாலும் ஊழலுக்கு எதிரான தனது போராட்டத்தை ☞ 2

# காணாமற்போனோர் குறித்த முறைப்பாடுகள் அடுத்த ஆண்டினுள் விசாரித்து முடிக்கப்படும்

### நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அறிவிப்பு

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளமுறைப்பாடுகளில் 4,795 முறைப்பாடுகள் தொடர்பில் பூர்வாங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முறைப்பாடுகள் தொடர்பான சகல விசாரணைகளையும் அடுத்த ஆண்டுக்குள் நிறைவு செய்துஉறுதியானதீர்மானத்தை எடுக்க எதிர்பார்த்துள்ளோம் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் நீதி, சிறைச் ☞ 2

## அச்சுவேலி விபத்தில் இளைஞர் பரிதாபச் சாவு

அச்சுவேலி நாவற்காடு பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் இந்த விபத்து இடம்பெற்றது. இதில் புத்தூர் பகுதியைச் சேர்ந்த சிவநேசன் சியான் (22 வயது) என்ற இளைஞர் உயிரிழந்தார்.

விற்பனைநிறுவனம்ஒன்றின்பட்டா ரக வாகனமும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் ☞ 2

# காஸா குறித்து ஆட்சியாளர்கள் பலவீனமான நிலைப்பாட்டில்

### லக்ஸ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு

பலஸ்தீனம் - காஸாவின் இன்றைய நிலை தொடர்பில் இலங்கை ஆட்சியாளர்கள் பலவீனமான நிலைப்பாட்டில் உள்ளார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் தயவை எதிர்பார்த்திருப்பதால் இந்த நிலை உள்ளதா என்பதை அறியவில்லை. காஸாவில் போர் குற்றங்கள் இடம்பெறுகின்றன. நாளாந்தம் 100க்கு அதிகமானோர் உயிரிழக்கிறார்கள். சர்வதேச நாணய நிதியமும் வேண்டும், மேற்குலகமும் வேண்டும். அதேநேரம் தர்மத்தின் நிலையில் இருந்து நாம் ஒரு தீர்மானத்தையும் எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024ஆம்ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்றத்தின் சுயாதீனத்தை பாதுகாக்க ஆட்சியாளர்களாக இருந்தபோதும் குரல் கொடுத்துள்ளோம். எதிர்க்கட்சியில் உள்ளபோதும் குரல் கொடுக்கிறோம். நீதிமன்றங்களையும், உயர் கல்வியையும் சுயாதீனப்படுத்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசியலமைப்பின்17ஆவதுதிருத்தத்தை கொண்டுவந்தார். மக்கள் விடுதலை முன்னணி உட்பட சகல அரசியல் கட்சிகளும் ஆதரவு வழங்கியது.

அரசமைப்பின் 17 ஆவது திருத் ☞ 8

# ஊடக அடக்குமுறைக்கு எதிராக ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

### வவுனியாவில் நேற்று நடந்தது




படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டியும், ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராகவும் வவுனியாவில் நேற்று (சனிக்கிழமை) கவனவீர்ப்புபோராட்டப்பேரணி முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா ஊடக அமையத்தின்ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள்கருத்துத்தெரிவிக்கையில் -

இலங்கையில் மாறிமாறிஆட்சிக்குவருகின்ற தரப்புக்கள்தமிழ்ஊடகங்களை அடக்கியாள நினைப்பதுவழமையான தொடர்கதையாகவே இருந்து வருகிறது. ☞ 8

# புதிய உலகிற்குப் பொருந்தும் தொழில் முயற்சியாளர்கள்

### அதுவே ரணிலின் இலக்கு என்கிறார் அமைச்சர்

தற்கால தலைமுறையைபுதியஉலகிற்கு பொருத்தமான தொழில் முயற்சியாளர்களாக உருவாக்குவதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நோக்கமாகும் என சிறு மற்றும் மத்தியதர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் 2.8 சதவீதம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பொறுப்பு எம்மைச் சார்ந்துள்ளது. 2024- 2028 வரையான காலப் பகுதியில் தொழில் முயற்சியாளர்களின் அளவை 10சதவீதமாக உயர்த்துவதே எமது இலக்காகும். ஒவ்வொரு துறைகளின்கீழும்காணப்படும் சிறு மற்றும் மத்திய தரத்திலானதுறைகளைப் பலப்படுத்தும்பணிகளை ஆரம்பித்துள்ளோம். அதற்காக அமைச்சின் கீழ்உள்ளநிறுவனங்களை ஒன்றிணைத்து பல வேலைத்திட்டங்களையும் ஆரம் ☞ 2

# காலநிலை நீதிமன்றத்தை முன்மொழிந்தார் ரணில்

காலநிலை மாற்றம் குறித்த பிரச்சினைகளுக்கு நீதியும் நியாயமானதுமான உணர்வுகளுடன் தீர்வு காண வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கோப்-28 மாநாட்டில் 'காலநிலை நீதி மன்றத்தை' முன்மொழிந்தார்.

ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் வேலைத்திட்டத்தின்நிறைவேற்றுப் பணிப்பாளர் இங்கர் அண்டர்சன் மற்றும் உகாண்டா சுகாதார அமைச்சர் வைத்தியர். அசெங் ஜேன் ரூத் ஆகியோரின் ஆதரவுடனேயே ஜனாதிபதி மேற்படி யோசனையை முன்மொழிந்தார்.

காலநிலை நீதிமன்றம் ☞ 2

# பூமியின் இருப்பை உறுதிசெய்ய முழு உலகமும் ஒன்றுபடவேண்டும்

### காலநிலை மாநாட்டில் ரணில் அறைகூவல்

காலநிலை இடர்களை மட்டுப்படுத்தி பூமியின் இருப்பை உறுதி செய்யவதற்காக முழு உலகமும் ஒன்றுபட வேண்டும். அதற்காக தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளவதற்கான தயார் நிலைமையை இவ்வருடத்திற்கான கோப்- 28 மாநாட்டில் தீர்மானிக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் 28ஆவது காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான கோப்-28 உயர்மட்ட மாநாடு 54 அரச தலைவர்களின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் டுபாய்எக்ஸ்போசிட்டியில் ஆரம்பமானது. ☞ 2

# வெள்ள வாய்க்காலில் வீழ்ந்து 4 வயதுச் சிறுமி பரிதாபச் சாவு

### முள்ளிப்பொத்தானையில் சம்பவம்

முள்ளிப்பொத்தானை 10 ஆம் கொலனியில் வாய்க்காலில் ஓடிய வெள்ள நீரில் விழுந்து சிறுமி ஒருவர் உயிரிழுந்துள்ளார்.

ரிஹால் அமல் ஹாஜர் என்ற நான்கு வயதுச் சிறுமியே இவ்வாறு பரிதாபரமாக உயிரிழந்தார். சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை- மாவட்டம் தம்பலகாமத்தில்உள்ளமுள்ளிப் பொத்தானையில் இருக்கும் வீட்டின் முன்பாகத் தந்தை வாகன பற்றரி மாற்றிக் கொண்டிருந்தபோது, சிறுமி அருகில் இருந்துள்ளார். மழைகாலம் என்பதால் வீட்டின் முன்பாக உள்ள வாய்க்காலில் வெள்ளம் அதிகமாகக் காணப்பட்டுள்ளது.

அந்த வாய்க்கால் அருகில் சிறுமி சென்று வேடிக்கை பார்த்திருக்கிறார். அப்போது அவர் அணிந்திருந்த செருப்பொன்று தவறி வாய்க்காலுக்குள் விழுந்துள்ளது. அதை எடுக்க முயன்றபோது, சிறுமி வாய்க்காலுக்குள் தவறி விழுந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தவறிவிழுந்தசிறுமி வாய்க்கால்வெள்ளத்தில் 500 மீற்றர் இழுத்துச் செல்லப் ☞ 8

# பிரேசில் ஜனாதிபதியுடன் ரணில் நேற்றுப் பேச்சு

டுபாயில்நடைபெறும் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாநாடான கோப்-28இக்கு இணையாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரேசில் ஜனாதிபதிலூயிஸ்இனாசியோ லூலாடா சில்வா ஆகியோருக்கு இடையிலான முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது ஜனாதிபதி விக்ரமசிங்க, வெப்பவலயநாடுகளான இலங்கை மற்றும் பிரேசில் ஆகிய இரு நாடுகளையும் பாதிக்ககூடிய விடயங்களுக்குத் தீர்வு காண ஒன்றுபடுமாறு கேட்டுக் கொண்டார்.

அத்தோடு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலாடா சில்வாவை இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

இதேவேளை, டுபாயில் நடைபெறும் ஐ.நா. காலநிலை மாநாடான கோப்-28இற்கு இணையாக ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கைவிடுவதில்லை என்று தீர்மானித்திருக்கிறார். தன்னை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கிய பின்னர், ரொஷான் தனக்கு மிகவும் நெருக்கமான ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் 12 பேருக்கு கடந்த வாரம் இரவு விருந்தளித்தார். அங்கு தனது எதிர்கால அரசியல் திட்டங்கள் குறித்து பேசியிருக்கிறார்.

இன்னும் 6 மாதங்களுக்குள் தேர்தலை சந்திக்க வேண்டும் என்றும், அதுவரை பதற்றம் அடையாமல் பொறுமை காக்க வேண்டும் என்றும் அவர்களிடம் தெரிவித்துள்ளார். ஆளும் தரப்பில் இருந்தாலும் பெயரைக் கெடுத்துக் கொள்ளாமல் இதுவரையில் செயற்பட்ட அதே வழியில் தொடருமாறும் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வலியுறுத்தியுள்ளார் ரொஷான்,

எதிர்வரும் சில மாதங்களில் நாட்டிற்குள் பெரும் அரசியல் சக்தியொன்று உருவாகும் எனவும் எதிர்வுகூறியுள்ளார். ஆனால் இந்த மாபெரும் அரசியல் சக்தி ஆளும் தரப்பில் இருந்து உருவாகுமா அல்லது எதிர்க்கட்சி தரப்பிலிருந்து உருவாகுமா என்பதை வெளிப்படுத்தாத ரொஷான், எதிர்காலத்தில் இவர்கள் அனைவரும் அந்த அரசியல் சக்தியுடன் ‘நல்ல அணி’யாக ஒன்றிணைய வேண்டும் என அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுள்ளார்

விருந்துண்டு

இதேவேளை, அதாவது ரொஷான் தற்போது அரசியல் கட்சியொன்றைத் தனது சொந்த உரிமையின் கீழ் எடுக்க நடவடிக்கை எடுத்துள்ளார். அஜந்த சொய்சாவிடம் இருந்த ருஹூனு ஜனதா கட்சியைத்தான் தனதுடமையாக்க அவர் முயல்கிறார் என்று தெரிகின்றது. அஜந்தாவின் ருஹூனு ஜனதா கட்சி கடந்த காலங்களில் பல தேர்தல்களில் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகும். இந்தக் கட்சியை ரெஷான் பெறுவதற்கான பேரம் சில மாதங்களுக்கு முன்பே படிந்துவிட்டதாக அறிய முடிகின்றது.

அதன்படி, திருட்டு, மோசடி அல்லது ஊழலுடன் தொடர்பில்லாத தனது 12 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட குழுவை எதிர்வரும் தேர்தலில் மாபெரும் அரசியல் கூட்டணியில் ஒரு கட்சியாக இணைத்துக்கொள்வதே ரொஷானின் திட்டம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர், அவரது ஆதரவாளர்கள் மத்தியில் ரொஷானுக்குச் செல்வாக்கு அதிகரித்துள்ளது. அவரைக் கடவுளாக நடத்தத் தொடங்கியுள்ளனராம் அவர்கள். ஆளும் தரப்பான பொது ஜன பெரமுன கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் நேரடியாக ரொஷானுக்கு ஆதரவு தெரிவித்து நிற்கின்றனர். தமது கட்சியைச் சேர்ந்தவரான ரொஷானைப் பதவி நீக்கிய, தமது ஆதரவில் ஜனாதிபதியான ரணிலின் செய்கையை தமது கட்சியின் மூத்த தலைவர்கள், அமைச்சர்கள் கண்டிக்கவில்லை என்று கொந்தளித்துப்போயுள்ளனராம் அவர்கள்.

பெரமுனவை நிர்மாணிப்பதில் பெரும் தியாகம் செய்த ரொஷானுக்கு ஆதரவாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, பொஹொட்டுவவின் தேசிய அமைப்பாளர் பஸில், நாமல் ராஜபக் ஷகூட ஆதரவு தெரிவிக்கவில்லை என்பது தமது எதிர்காலம் குறித்த கேள்வியை அவர்களுக்குள் எழுப்பியுள்ளது. இது ஆளும் தரப்புக்குள் மேலும் பிரிவுகளை உருவாக்கும் என்று கருத்தை ஏற்படுத்தி வருகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## காணாமற்போனோர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர், காணாமல்போனோர் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து மேலும் தெரிவித்ததாவது:

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகள் தற்போது வினைத்திறனாக்கப்பட்டுள்ளன.

அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 62 முறைப்பாடுகள் தொடர்பில் மாத்திரமே கடந்த காலங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், புதிய நிர்வாகக் கட்டமைப்புடன் 4,795 முறைப்பாடுகள் தொடர்பில் பூர்வாங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டுக்குள் அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை நிறைவு செய்து ஒரு தீர்மானத்தை எடுக்க எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## அச்சுவேலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விபத்து ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த இருவரில் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும், மற்றையவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பித்துள்ளோம்.

அதேபோல் சாதாரண தர பரீட்சையின் பின்னர் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் தொழில் சந்தைக்குள் நுழைகிறார்கள். இருப்பின் அவர்களுக்கான வாய்ப்பு தொழில் சந்தையில் கிடைப்பதில்லை. அதனால் அவர்களையும் தொழில் முயற்சியாளர்களாக மாற்றுவதே எமது நோக்கமாகும். முச்சக்கர வண்டியுடன் வீதியிலிறங்கும் சமுதாயத்தை அதிலிருந்து மீட்டெடுத்து உரிய தெரிவையும் பயிற்சிகளையும் வழங்குவதே எமது நோக்கமாகும்.

வரலாற்றில் முதன் முறையாக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து சிறிய கடன் முன்மொழிவுகளின் கீழ் 30 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் கீழ் தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான மூலதனத்தை 2சதவீத சலுகை வட்டியின் கீழ் பெற்றுக் கொடுக்க எதிர்பார்ப்பதோடு, அவர்களை புதிய உலகிற்கு பொருத்தமான தலைமுறையாக மாற்றுவதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினதும் எம்முடையதும் நோக்கமாகும்.

அதேபோல், உலகச் சந்தையில் 2024-2025 ஆண்டுக்காக விடுவிக்கப்படவுள்ள 789 பில்லியனிலிருந்து ஒரு சதவீதம் பெற்றுக்கொள்ள முடியும் என்றாலும் அது நாட்டுக்கு கிடைக்கும் மிகப்பெரிய வெற்றியாகும் என்றார்.

## காலநிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்துவதற்கு அவசியமான ஒன்றுபட்ட முயற்சிக்காக அனைத்து தரப்புக்களையும் ஒன்றுசேர்க்கும் அர்ப்பணிப்புக்கான முதற்கட்டச் செயற்பாடாகும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

இது அரசாங்களினால் மாத்திரம் முன்னெடுக்ககூடிய செயற்பாடு அல்லவென்றும் அதற்கு தனியார் துறையின் பங்களிப்பு மிகவும் அத்தியாவசியமானது என்றும், நட்டம் மற்றும் இழப்பீட்டுக்கான நிதியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விடவும் அதிகமான தொகை இஸ்ரேல் மற்றும் காஸா எல்லைகளில் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ள செலவிடப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, காலநிலை மாற்றங்களுக்காக நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்துவதற்கான நிலையான தீர்வாகவே காலநிலை நீதிமன்றத்தை முன்மொழிந்திருப்பதால், அதனுடன் இணைந்துகொள்ளுமாறு சகலருக்கும் அழைப்பு விடுத்த ஜனாதிபதி, இலங்கை முன்மொழிந்திருக்கும் வேலைத்திட்டத்தை முன்னோக்கி கொண்டுச் செல்வதற்கான பங்குதாரர்களுடன் இணைந்துகொள்ளுமாறு ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் வேலைத்திட்டம், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம், ஐரோப்பிய சங்கத்திற்கும் அழைப்பு விடுத்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் வேலைத்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒன்கர் அண்டர்சன், காலநிலை அனர்த்தங்களுக்கு எதிராக போராடுவதற்கு அவசியமான செயற்பாடுகள் மற்றும் தற்போதைய முயற்சிகளில் காணப்படும் குறைப்பாடுகள் தொடர்பிலும் விளக்கமளித்தார்.

காலநிலை அனர்த்தங்கள் தொடர்பான பிரச்சினைகளை மட்டுப்படுத்துவதற்காக அனைத்து நாடுகளையும் ஒன்றிணைக்கும் பெரும் சக்தியாக காலநிலை நீதிமன்றம் செயற்படும் என்றும் அதனை வரவேற்பதாகவும் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

சுற்றாடல் அமைச்சர் கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்ல, காலநிலை அனர்த்தங்களுக்கு வலுவாக ஈடுகொடுப்பதற்கு காலநிலை நீதிமன்றம் போன்ற முன்னெடுப்புக்கள் அவசியம் என வலியுறுத்தினார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்துவதற்கான தற்போது முன்னெடுக்கப்பட்டும் கலந்துரையாடல்களுக்கு மேலதிகமான பல்வேறு முயற்சிகள் அவசியப்படுகின்றன. நிலையான எதிர்காலத்திற்கான உலகளாவிய களத்தை அமைப்பதற்காக காலநிலை நீதிமன்றம் தொடர்பான யோசனையை இலங்கையின் வெளிநாட்டு கொள்கையில் உள்ளடக்கவுள்ளோம் என சுட்டிக் காட்டினார்.

உகாண்டா சுகாதார அமைச்சர் வைத்தியர். அசெங் ஜேன் ரூத், காலநிலை நீதிமன்றத்தை அன்பாக ஏற்றுக்கொள்வதாகவும் காலநிலை அனர்த்தங்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு, இதன்மூலம் வலுவான தலைமைத்துவத்தை வழங்கமுடியுமெனவும் தெரிவித்தார்.

## பூமியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோப்-28 ஒத்துழைப்பு வழங்கியமைக்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் மன்னருக்கும், அரசாங்கத்திற்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

2023 ஆம் ஆண்டு ஐ.நா சுற்றாடல் வேலைத்திட்ட அறிக்கையில் குறித்த விடயம் ’உடைக்கப்பட்ட வாக்குறுதிகள்’ என்று எச்சரிக்கப்பட்டிருப்பதோடு, நூற்றாண்டின் இறுதியில் உலகின் வெப்பநிலை 3 செல்சியஸினால் அதிகரிக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிதி, தொழில்நுட்பம் மற்றும் காலநிலைக்கான முதலீடுகள் தொடர்பிலான குறைந்தளவான செயற்பாடுகளின் விளைவாக, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பெரும் விளைவுகளுக்கு முகம்கொடுக்க நேரிடும்.

காலநிலை நிதியளித்த தொடர்பான உயர்மட்ட நிபுணத்துவ குழுவின் அறிக்கையில் காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுப்பதற்கு வருடத்திற்கு குறைந்தபட்சம் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களாவது அவசியப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிதியளிப்பதற்கான நியதிகளை செயற்படுத்துவதற்கான குழுவின் 2023 நவம்பர் 4 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில் சுயாதீன பங்களிப்புக்களை மாத்திரம் பெற்றுத்தருமாறு கோரப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் இந்த நிதியம் அல்லது நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் தரப்பு தொடர்பிலான விடயங்கள் குறிப்பிடப்படவில்லை. அந்த அறிக்கையும் உலக கடன் சலுகை வழங்கல் தொடர்பிலான பிரச்சினையின் போது பதிலற்றதாக விளங்குகிறது.

எவ்வாறாயினும், அந்த அறிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து நான்கு நாட்களுக்குப் பிறகு வெளியிடப்பட்ட உலகளாவிய மதிப்பீட்டு தொடர்பிலான முதலாவது தொழில்நுட்ப கலந்துரையாடலுக்கான அறிக்கையில் இதற்காக வருடத்திற்கு குறைந்தபட்சம் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் அவசியப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முரண்பாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கான இணக்கப்பாடுகளை எட்டுவது இதற்கான தீர்வாக அமையாது. நாம் யாரை ஏமாற்ற போகிறோம்? காலநிலை நீதிகளை மறுக்கிறோம்.

ஐந்தாவது ஆசிய பசுபிக் வலய சுற்றாடல் அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களின் மாநாட்டின் இணக்கபாட்டுக்கு அமைவாக, 2024 பெப்ரவரி 06 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் சுற்றாடல் மாநாட்டில் காலநிலை நீதிமன்றம் ஒன்றை நிறுவுவதற்கான யோசனையை இலங்கை முன்வைக்க இருக்கிறது.

அந்த நீதிமன்றம் ஊடாக காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமானதும் செயற்திறன் மிக்கதுமான தலையீடுகளை மேற்கொள்வதற்கான களத்தை உருவாக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் கூறியது போல், வரி செலுத்துவோரின் பணம் வீணாகாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான சிக்கலைத் தீர்க்க, ’உலகளாவிய தீப்பிடிக்கும் காலம் வந்துவிட்டது.’

எதிரி நம் வாசலில் இருக்கிறான். நாங்கள் இன்னும் தள்ளிப்போடுகிறோம். எதிர்த்துப் போரிட படைகளை தயார்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

எனவே, அடுத்த இரு வாரங்கள் மிக முக்கியமானது. காலநிலை மாற்றத்தைத் தணிக்க தலைமைத்துவத்தை வழங்கும் திறன் நம்மிடம் உள்ளதா இல்லையா என்பதை அதன் மூலம் தீர்மானிக்க முடியும்.

புவி வெப்பமடைதலை 1.5 செல்சியஸியினால் குறைப்பதில் இலங்கை உறுதியாக உள்ளது.

பூமியின் 44சதவீதம் மேற்பரப்பில் 134 வெப்ப வலய நாடுகள் உள்ளன. 2030 களில் அந்த நாடுகளிலேயே உலகின் 50சதவீதம் மக்கள்தொகை காணப்படும்.

22ஆம் நூற்றாண்டில் வெப்ப வலயம் பூமத்திய ரேகையிலிருந்து விலகிச் செல்லக்கூடும் என்று சில விஞ்ஞானிகள் எதிர்வுகூறியுள்ளனர். புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்தல் மற்றும் இயற்கை தீர்வுகளுக்கு பெருமளவான முதலீடுகள் தேவை.

எனவே, இலங்கை மற்றும் ஏனைய தரப்பினர் வெப்ப வலயம் தொடர்பான அறிக்கையிடலுக்கான நிபுணர் குழு ஒன்றை கூட்ட தீர்மானித்துள்ளனர். இது வெப்ப வலயத்திலும் மாத்திரமின்றி உலகம் முழுவதிலும் பல துறைசார் திட்டத்தை பகிர்ந்தளிக்க உள்ளது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தை சுற்றியுள்ள நாடுகள் சங்கத்தின் தற்போதைய தலைவர் என்ற வகையில், இலங்கை இந்து சமுத்திரத்திற்கும் மற்றும் காலநிலை மாற்றத்துக்கும் இடையில் நிலவும் ஒன்றோடு ஒன்று சார்ந்திருத்தல் தன்மை தொடர்பில் கவனம் செலுத்துகிறது.

ஒரு பாதுகாப்பான கடல் மூலம் ஒட்சிசன் உற்பத்தி செய்யப்படுவதோடு, புவி வெப்பமடைதலால் உற்பத்தி செய்யப்படும் கார்பன் மற்றும் வெப்பம் அதன் ஊடாக உறிஞ்சப்படுகிறது. நிலப்பரப்பு, காடுகளுடன் ஒப்பிடும்போது, சதுப்புநிலங்கள் மற்றும் கடற்புற்கள் மூலம் அதிக கார்பன் உறிஞ்சப்படுகின்றன.

இருப்பினும், விரைவான காலநிலை மாற்றம் காரணமாக கடல் சூழல் மாறி வருவதுடன், இதனால் கடல் மட்டம் மற்றும் வெப்பநிலை உயர்கிறது. கடல் அமிலமயமாக்கல், பவளப்பாறைகள் அழிவு, கடல்வாழ்



காலைக்கதிர் Kalaikkathir

# நினைவேந்தல்களில் இருந்து இளைஞர்களை விலக்கி வைக்கவே கைது இடம்பெறுகின்றது

## அருட்தந்தை மா.சக்திவேல் காட்டம்



பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் பலரைக் கைது செய்தமை நினைவேந்தல் போன்ற நிகழ்வுகளிலிருந்து இளைஞர்களை விலகச் செய்யும் செயற்பாடே என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேலால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மாவீரர் வாரமும் மாவீரர் நாளும் ஒட்டு மொத்த தமிழர்களையும் ஒன்றிணைக்கும் ஒரு தேசிய நிகழ்வாகும். அதனை வடக்கிலும், கிழக்கிலும், புலம்பெயர் நாடுகளிலும் வேதனைக்கு மத்தியிலும் அந்த நாள்களில் எழுச்சியுடன் ஒன்று கூடி உயிர் கொடையாளர்களுக்கு சுடர் ஏற்றி நினைவஞ்சலி செய்வதோடு நின்று விடாது தமிழர்களின் தேசத்திற்காக போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க திடசங்கட்பம் கொள்ளும் நாளும் இதுவாகும்.

இதனை பாரிய இனப்படுகொலைகளோடு அழிக்கநினைத்தவர்களுக்கு அதுதோல்வியே என தற்போது உணர்வதால் இந்நிகழ்வுக்கு எதிரான செயற்பாடுகளை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல்வேறு வடிவங்களில் கூட்டாக அழிப்பு வேலைகளை நடைமுறைப்படுத்த எதிர் சக்திகள் திட்டமிட்டுள்ளன என்பதை இவ்வருட சம்பவங்கள் உணர்த்துகின்றன.

இதற்கு வடக்கு, கிழக்கு தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் கூட்டாக தமது அடுத்த கட்ட நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும். தற்போது நாம் முகம் கொடுக்கும் சிக்கல்களை சிவப்பு சமிக்ஞையாக ஏற்காவிடின் பாரிய விலை கொடுக்கும் நிலை உருவாகும்.

தமிழர் தேசத்திற்கும், தேசியத்திற்கும் எதிரான சக்திகளிடம் சோரம் போன தமிழர் முகமூடி தரித்த சிலர் மேதகு தலைவரின் மக்களென ஒரு போலியை மேடையேற்றி தீட்டிய சதித்திட்டம் அம்பலமாகியுள்ளது. 'தலைவர் இருக்கிறார்'. 'அவர் வருவார்'...'வருவார்...' என கூறி இன்னும் ஒரு தலைமைத்துவம் உருவாகக்கூடாது என நினைத்தவர்கள் தமது முயற்சியின் அடுத்த கட்டமாக போலி முகத்தை மேடையேற்றி அவமானப்பட்டுள்ளனர். இத்தோடு அவர்கள் நின்றுவிடப்போவதில்லை.

இன்னும் ஒரு பக்கம் சேனையின் பெயரால் தாயகத்தில் இயங்கும் அமைப்பு ஒன்று மாவீரர்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் அவர்களை அவமானப்படுத்தும் வண்ணம் முகநூலில் பதிவிட்டுள்ளது. அதன் மூலம் புதிய தலைமுறையினரின் மூளையை சலவை செய்து அரசியலில் இருந்து தூரமாக்க முயற்சிக்கின்றனர். உயிர் தியாக வரலாற்றை எம் காலத்திலேயே குழி தோண்டி புதைக்கவும் வழி செய்கின்றனர்.

அடுத்ததாகத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளாததும் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டதுமான 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்துமாறு இந்தியாவிற்கு அழுத்தம் கொடுக்க கூட்டமாக காவடி தூக்கி கொடி பிடிக்க இன்னும் ஒரு கூட்டம் பகிரங்கமாகவே எழுந்து நிற்கின்றது. இதனையும் சதியாகவே கொள்ளல் வேண்டும். இவர்கள் தமிழ் மக்கள் பேரவை இயங்கிய காலத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என ஆவணம் தயாரித்து பௌத்த மகா சங்கத்திடம் தூக்கி சென்றதை மறந்துவிட்டனர் போலும். இவர்களே தமிழ் மக்கள் பேரவைக்கு வீழ்ச்சிக்கும் காரணமானவர்கள் என்பது இப்போது புலனாகின்றது.

இது இவ்வாறு இருக்க இலங்கை அரசு மீண்டும் புலி உருவாக்கம் என்பதை கையில் எடுத்து இவ்வருடம் மாவீரர் தின நிகழ்வோடு பலரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து இருக்கின்றது. மாவீரர் நாள் நிகழ்வு தொடர்பாக மேலும் பலருக்கு வலை வீசிக் கொண்டிருக்கின்றனர். இதுவும் இளைஞர் மத்தியில் அரசியலில் ஈடுபடுபவர்களுக்கு பயத்தை உருவாக்கும் செயலாகும். நினைவேந்தல் போன்ற நிகழ்வில் இருந்து சுயமாகவே விலகச் செய்வதற்கான வேலை திட்டங்களில் இதுவும் ஒன்று எனக் கூறலாம்.

2009 இல் விடுதலை இயக்கத்தை அழிப்பதாக ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொது மக்களை படுகொலை செய்த இலங்கை அரசு, தமிழர்களை அரசியல் ரீதியாகப் படுகொலை செய்வதற்கு பல்வேறு சதிகளை கூட்டு சேர்ந்து தீவிரபடுத்தி உள்ள காலகட்டத்தில் வாழ்கிறோம். இதற்கு எம்மவர்களும் மறைமுகமாகவும் நேரடியாகவும் சூழ்ச்சி செய்வதும் பயணிப்பதும் நீண்ட நாள்களாகத் தொடர்கின்றது.

இத்தகையவர்களை சமூகத்துக்கு அடையாளம் காட்டுவதுடன் எமது அடுத்த சந்ததியினரை இச் சூழ்ச்சி வலை நின்று பாதுகாத்து அரசியல் அறம் பிறழாது வாழ்வு போராட்டங்களைப் பாதுகாப்போடு முன்னெடுக்க வழிகாட்டும் மிகப்பெரிய பொறுப்பு விழிப்புடன் செயல்படும் அரசியல் தலைமைகளுக்கு உள்ளது.

சுயநல அரசியலையும், சுகபோக அரசியலையும், காவடிதூக்கும் அரசியலையும் புறந்தள்ளி அரசியல் தலைமைத்துவங்கள் கூட்டாகசெயற்படவேண்டியகாலம் இதுவாகும். அன்று உயிருக்கு பயந்து ஒரு தலைமையின் கீழ் நாங்கள் செயல்படுவோம் என போலி முகத்தோடு உறுதி பூண்ட அரசியல் தலைமைத்துவங்கள் தடம் புரண்டுள்ள இன்றைய நிலையில் தியாகத்தோடு தமிழர்களின் தேசிய அரசியலை முன்னகர்த்த அறம் சார்ந்த அரசியல் செயற்பாட்டை ராஜதந்திரத்தோடு முன்னெடுக்க அரசியல் தலைமைகளுக்கு சமூக அமைப்புக்கள் அனைத்தும் கூட்டாக அழுத்தம் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (05)

# வவுனியாவில் 66 குடும்பங்களுக்கு வீட்டு உரிமை பத்திரங்கள்















வவுனியாவில் 66 குடும்பங்களுக்கு வீட்டு உரிமைப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன. வெள்ளிக்கிழமை வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கீழ் உள்ள வவுனியா மாவட்ட வீடமைப்பு அலுவலகத்தின் கீழ் வாழும் மூவினங்களையும் சேர்ந்த 66 குடும்பங்களுக்கு அவர்களது வீட்டுக்கான உரிமைப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ரஜிவ் சூரியராச்சி, உபதலைவர் லக்ஸ்மன் குணவர்த்தன, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலாளர், வீடமைப்பு திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் நிலை

**மார்கழி மாதம் வந்துவிட்டதால் கிறிஸ்மஸ் மோகத்தின் அறிகுறிகளைக் கடைகளில் பார்க்க முடிகின்றது. கொண்டாட்டக்காலத்தில் மக்களைக் கவரும் விதமாக மின்விளக்குகள், கிறிஸ்மஸ் மரம் என்பவற்றைக் கொண்டு கடைகள் அலங்கரிக்கப்படுகின்றன. கிறிஸ்மஸ் தொடர்ந்து புத்தாண்டு என்று இது ஒரு கொண்டாட்ட மாதமாக களைகட்டத் தொடங்கியுள்ளது. வர்த்தகர்களிடம் காணப்படும் ஆர்ப்பரிப்பு, இந்த மாதத்தில் அவர்களின் வர்த்தக எதிர்பார்ப்புக்களை வெளிப்படுத்துகின்றது. ஆனால், நாட்டின் பொருளாதாரநிலையில் இந்தக் கொண்டாட்ட மாதம் சிறப்பானதாக அமையுமா? இலங்கை மட்டுமல்ல உலகமுமே கிறிஸ்மஸைக் கொண்டாடக்கூடிய இடத்தில்தான் இருக்கின்றதா?**

**இன்னும் 21 நாட்களில் நாம் – இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள், பணக்காரர்கள் மற்றும் ஏழைகள், போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்ற மக்கள் மீது போரைத் திணிப்பவர்கள் – அனைவரும் நம் சொந்த வழியில் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடுவார்கள். ஆனால், பலஸ்தீன – இஸ்ரேல் போர் இந்தக் கொண்டாட்டங்களைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.**

**காஸாவில் உள்ள தங்கள் சகோதரர்களுடன் ஒற்றுமையாக இருப்பதன் அடையாளமாக இந்த ஆண்டு அனைத்து கிறிஸ்மஸ் விழாக்களையும் கைவிடுவதாக மேற்குக்கரையில் உள்ள பலஸ்தீன கிறிஸ்தவ தலைவர்கள் கடந்த வாரம் முடிவு செய்துள்ளனர்.**

**பெத்லகேமின் சுவிசேஷ லூத்தரன் கிறிஸ்துமஸ் தேவாலயத்தின் பாதிரியார் முன்தர் ஐசக், இது தொடர்பில் வோஷிங்டன் போஸ்ட் நிருபரிடம் பேசியபோது, ‘இது 1.7 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்த ஒரு இனப்படுகொலையாக மாறியுள்ளது. இப்போது கிறிஸ்துமஸ் நமக்கு உணர்த்துவது இதுதான், எல்லாவற்றையும் இழந்து, இடிபாடுகளுக்கு அடியில் இருப்பவர்களிடையே இயேசு பிறப்பதைக் காண்கிறோம்...‘**

**கிறிஸ்மஸ் கிறிஸ்துவின் பிறப்பைக் குறிக்கும் கிறிஸ்தவர்களுக்கு ஒரு மத விழாவாக இருந்தாலும், இன்று கிறிஸ்துமஸ் ஒரு உலகளாவிய கலாச்சார நிகழ்வாகவும் உள்ளது.**

**பல்வேறு நாடுகள், சமூகங்கள், மதங்கள் மற்றும் நம்பிக்கைகளைச் சேர்ந்தவர்கள் அனைவரும் கிறிஸ்துமஸ் கொண்டாடுகிறார்கள். சிலர் விழாக்களை ஒரு வணிக மயமாக்கலாக பார்க்க முனைகிறார்கள், இது நிகழ்வின் முக்கியத்துவத்தை பறிக்கிறது.**

**ஆயினும்கூட, பண்டிகைகள் குடும்பங்களையும் சமூகங்களையும் ஒன்றிணைக்கும் நிகழ்வுகள், அவர்கள் பணக்காரர்களாக இருந்தாலும் சரி, ஏழைகளாக இருந்தாலும் சரி. பணக்காரர்களைப் பொறுத்தவரை, கிறிஸ்மஸ் என்பது கிறிஸ்து உலகிற்கு வருவதையும், விழாக்களில் அவர் பங்கேற்பதையும் (கானாவில் திருமண விருந்து), சிலுவையில் அறையப்பட்டதைப் போலவே உடல் வலியையும், உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு நீதிக்காக அவர் போராடுவதையும் குறிக்கிறது.**

**இந்தப் பண்டிகை நாட்கள் இலங்கையிலும் ஏனைய இடங்களிலும் மகிழ்ச்சியான கொண்டாட்டங்களுக்கு இடமளிக்கும் என்று எதிர்பார்க்க முடியவில்லை என்பது சோகமே.**

# ஆல்ட்மேனும் ஏஐயும்




**சிம்மன்**

செயற்கை நுண்ணறிவு (ஏஐ) துறைக்கும் நவம்பர் மாதத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது போலும். அதிகம் அறியப்பட்டிருக்காத ஓபன் ஏஐ எனும் ஸ்டார்ட்-அப் நிறுவனம், ‘சாட்ஜிபிடி’ எனும் ஏஐ அரட்டைப்பெட்டியை (Chatbot) 2022 நவம்பரில் அறிமுகப்படுத்தியது. அடுத்துவந்த மாதங்களில் சாட்ஜிபிடி ஏற்படுத்திய பரபரப்பாலும், பெற்ற வரவேற்பாலும் சாட்பாட்களும், அவற்றை இயக்கும் ஏஐ நுட்பமும் வெகுமக்களைக் கவரும் பேசுபொருளாகின.




இதோ, இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில், ஓபன் ஏஐ நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பதவியிலிருந்து சாம் ஆல்ட்மேன் நீக்கப்பட்ட செய்தி வெளியானது. மைக்ரோசாஃப்ட் நிறுவனம் அவரை உடனடியாக இருகரம் நீட்டி வரவேற்றது, ஓபன் ஏஐ ஊழியர்களின் ஆதரவுடன் அவர் மீண்டும் தாய் நிறுவனத்துக்கே திரும்பியது, அதேவேகத்தில் - தன்னை வெளியேற்றக் காரணமான - இயக்குநர் குழுமத்தைக் கூண்டோடு வெளியேற்றியது என அடுத்தடுத்து நிகழ்ந்த, நிகழ்ந்துகொண்டிருக்கின்ற அனைத்துமே ஏஐ உலகைப் பரபரப்பின் உச்சிக்குத் தள்ளியிருக்கின்றன.

ஆல்ட்மேன் நீக்கம்: ஓபன் ஏஐ இயக்குநர் குழுமம், ஆல்ட்மேனை நீக்குவதாக அறிவித்தபோது, ‘நிறுவனத்தை உருவாக்கிய-வருக்கே இந்தக் கதியா?’ எனும் எண்ணம்தான் பலருக்கும் முதலில் உண்டானது. ஸ்டீவ் ஜாப்ஸ் அவர் உருவாக்கிய ஆப்பிள் நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டதோடு ஆல்ட்மேன் நீக்கம் ஒப்பிடப்பட்டு, இதற்கான பின்னணிக் காரணங்கள் அலசப்பட்டன. இன்னொரு பக்கம் ஆல்ட்மேனின் சரிவு, வீழ்ச்சி என்றெல்லாம் பேசப்பட்டாலும், அவருக்கான ஆதரவும் அதிகரித்துவந்தது. சிலிக்கான் பள்ளத்தாக்கின் பெரும்புள்ளிகள் பலர் ஆல்ட்மேனுக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்த நிலையில், மைக்ரோசாஃப்ட் தலைமைச் செயல் அதிகாரி சத்ய நாதெள்ளா, தனது நிறுவனத்தின் ஏஐ பிரிவுக்குப் பொறுப்பேற்குமாறு அழைப்புவிடுத்தார்.

இதனிடையே, ஓபன் ஏஐ நிறுவனத்தின் ஊழியர்களில் பெரும் பகுதியினர், ஆல்ட்மேன் நீக்கத்தைத் திரும்பப் பெறவில்லை என்றால் தாங்கள் வெளியேறுவதாகக் கடிதம் எழுதினர். இயக்குநர் குழுமம் விலக வேண்டும் என்றும் எச்சரித்தனர். அது நடந்தேறியும்விட்டது. ஏஐ உலகில் ஆல்ட்மேனின் செல்வாக்கு குறையவில்லை என்பதற்கான அத்தாட்சி அது. இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. சாட்ஜிபிடியின் அசுர வெற்றியை அடுத்து, இனி எல்லாமே ஏஐதான் எனக் கருதப்படும் நிலையில், அதன் தலைமைச் செயல் அதிகாரியான ஆல்ட்மேன் செல்வாக்கு மிக்கவராகவே இருந்தார். நிறுவனத்தின் எதிர்காலப் பாதையை வகுப்பதோடு, உலகத்தலைவர்களை எல்லாம் அவரால் எளிதாகச் சந்தித்துப்பேசவும் முடிந்தது. அண்மையில் பிரிட்டனில் நடைபெற்ற ஏஐ பாதுகாப்பு மாநாட்டில் ஆல்ட்மேனுக்கு முக்கிய இடம் அளிக் கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

யார் இந்த ஆல்ட்மேன்? - 38 வயதே ஆன அமெரிக்கரான ஆல்ட்மேன், ஸ்டார்ட்-அப் உலகில் இளம் வெற்றி நாயகர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். கல்லூரிப் படிப்பை முடிக்காத ஆல்ட்மேன், லூப்ட் (Loopt) எனும் ஸ்டார்ட்-அப் நிறுவனத்தைத் தொடங்கி நடத்தினார். அதன் பிறகு, ஸ்டார்ட் -அப் பள்ளி என அழைக் கப்படும் ஒய் காம்பினேட்டர் (Y Combinator) நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் செயல்பட்டார். பல வெற்றிகரமான ஸ்டார்ட்-அப்களின் உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகித்திருக்கிறார். வெற்றிகரமான ஸ்டார்ட்-அப்களில் முதலீடும் செய்திருக்கிறார். ஆல்ட்மேன் செல்வ வளம் பெற இந்த முதலீடுகள் வழிவகுத்ததோடு, தொழில் நுட்ப உலகின் எதிர்காலப் போக்குகளைக் கணித்து புதிய நிறுவனங்களை வழிநடத்தக் கூடிய நிர்வாகத் திறன் கொண்டவராக அவரை அறியவைத்தது.

### சாட்ஜிபிடி பூதம்

இந்தநிலையில்தான், 2015இல் மனிதகுலத்துக்கு நன்மை தரும் வகையில் ஏஐ ஆய்வில் ஈடுபடும் நோக்கத்தோடு, முன்னணி ஏஐ ஆய்வாளர்கள், தொழிலதிபர்கள், வர்த்தக நிறுவனங்கள் துணையோடு ‘ஓபன் ஏஐ’ நிறுவனத்தை ஆல்ட்மேன் உருவாக்கினார். இந்நிறுவன ஆய்வில் உருவான ஜிபிடி மொழிமாதிரியின் பலனாகத்தான் கடந்த ஆண்டு சாட்ஜிபிடியாக அறிமுகமானது. பல ஏஐ மென்பொருள்களும் அறிமுகமாகின. ஏஐ ஆய்வில் மைக்ரோசாஃப்ட், கூகுள், மெட்டா உள்ளிட்ட பல நிறுவனங்கள் ஈடுபட்டிருந்தாலும், பலவிதமான அரட்டைப்பெட்டிகள் பயன்பாட்டில் இருந்தாலும், சாட்ஜிபிடியின் செயல்திறன் அதிசயிக்க வைப்பதாக அமைந்திருந்தது.

மனிதர்களோடு உரையாடும் திறனோடு, இதன் ஆக்கத்திறனும் வியக்கவே வைத்தது. ஏஐ உலகிலும், குறிப்பாக அரட்டைப்பெட்டிப் பிரிவிலும் பெரும் போட்டியை உண்டாக்கியது. ஏஐ நுட்பத்தின் கட்டுப்பாடில்லாத வளர்ச்சி தொடர்பான கவலையும் அதிகரித்தது. சாட்ஜிபிடி போன்ற அரட்டைப்பெட்டிகள் வேலைவாய்ப்பைப் பறிக்கும் என்பது தொடர்பான அச்சம் ஒரு பக்கம் தீவிரமடைய, இன்னொரு பக்கம் அடுத்தகட்ட ஏஐ சேவைகள் எதிர்காலத்தில் மனிதகுலத்துக்கே ஆபத்தாக முடியலாம் எனும் அச்சமும் ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகிறது. எனவே, ஏஐ ஆய்வுக்குக் கடிவாளம் போட வேண்டும் என்கிற கருத்தும் வலுப்பெற்றிருக்கிறது. ஏஐ சட்டம், ஏஐ அறம் பற்றி எல்லாம் வலியுறுத்தப்படுகிறது.

### ஏஐ எதிர்காலம்

இந்தப் பின்னணியில், ஆல்ட்மேன் நீக்க விவகாரம் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டிருப்பதைப் புரிந்துகொள்ளலாம். முதல் வியம், ஓபன் ஏஐ நிறுவன இயக்குநர் குழுமத்துக்கும், ஆல்ட்மேனுக்கும் இடையே மோதல் வர என்ன காரணம் எனும் கேள்வி. இது தொடர்பாக வெளிப்படையான தகவல்கள் குறைவு என்றாலும், இயக்குநர் குழுமம் ஏஐ வளர்ச்சியில் பாதுகாப்பான அணுகுமுறையை நாடிய நிலையில், ஆல்ட்மேனின் அணுகுமுறையோ அடுத்தகட்ட ஏஐ நுட்பங்களை உருவாக்கும் திசையில் அமைந்திருந்தது முக்கியக் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

ஆல்ட்மேன் வெளிப்படைத் தன்மையைக் கொண்டிருக்கவில்லை என்றும், சொந்த நிறுவன உருவாக்கத்தில் கவனம் செலுத்து-வதாகவும் ஓபன் ஏஐ இயக்குநர் குழுமம் குற்றம்சாட்டியது. ஆல்ட்மேனுக்கு மைக்ரோசாஃப்ட் நிறுவனம் சிவப்புக் கம்பளம் விரித்தது பல வியங்களை உணர்த்தியிருக்கிறது. ஏஐ போட்டியில் முன்னிலை பெறும் விழைவு இதன் பின்னே இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஓபன் ஏஐ முதலீட்டாளர்களில் மைக்ரோசாஃப்ட் நிறுவனமும் ஒன்று என்பது கவனிக்கத்தக்கது. ஓபன் ஏஐ நிறுவன ஊழியர்கள் ஆல்ட்மேனின் பின்னர் அணி திரண்டிருப்பதும், முதலீட்டாளர் சமூகமும் அவருக்கு ஆதரவாக நிற்பதும் முக்கியமானதாக அமைகிறது. இவ்வளவுக்கும் ஆல்ட்மேன் ஏஐநுட்பங்களை அறிந்த ஆய்வாளர் இல்லை என்றாலும், நிர்வாகத் திறனும், தொழில்நுட்பத் தொலைநோக்குமே அவரின் செல்வாக்குக்கான காரணங்கள்.

பிக்டெக்தாக்கம்: இதனிடையே, ஆல்ட்மேன் தன் மீதான அதிகப்படியான நம்பிக்கையால் வழிநடத்தப்படுவதாகவும் உளவியல் நோக்கில் வல்லுநர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். எது எப்படியோ, ஆல்ட்மேன் நீக்க விவகாரம் இன்னும் திருப்பங்களைக் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. அதோடு இதன் பின்னணியில் மறைந்திருக்கும் வியங்கள் என்ன எனும் கேள்வியும் தீவிரமடைகிறது. ஓபன் ஏஐ எனும் நிறுவனத்தின் உள்விவகாரமாக மட்டும் அல்லாமல், ஏஐ உலகின் எதிர்கால திசைவழி தொடர்பான முக்கிய நிகழ்வாகவும் இந்த விவகாரம் அமைகிறது. ஏற்கெனவே, தொழில்நுட்ப உலகில் பிக்டெக் என சொல்லப்படும் பெரும் தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆதிக்கம் பற்றி விவாதிக்கப்படும் நிலையில், ஏஐ உலகிலும் பெரும் நிறுவனங்களின் லட்சியமும், திட்டங்களும், போட்டியும் பின்னிப் பிணைந்திருக்கின்றன. வர்த்தகலாபம் சார்ந்த அரசியலும் கலந்திருக்கும் இந்தச் சிக்கலான நிகழ்வுகளின் மையப் புள்ளிகளில் ஒன்றாக சாம் ஆல்ட்மேன் இருக்கிறார். அவரது எதிர்காலம், ஏஐ எதிர்காலத்துடன் தொடர்புடையதாகவும் அமைந்திருப்பது அவரது முக்கியத்துவத்தை மேலும் அதிகமாக்குகிறது. எல்லாவற்றையும் தாண்டி, ஏஐ ஆய்வு செல்லும் திசையைத் தீர்மானிக்கும் நிகழ்வுகளையும் இன்னும் தீவிரமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியது முக்கியம்.

காலைக்கதிர் Kalaikkathir

# மஹாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவு இருமடங்காகும்

## தனது நிலைப்பாடென்கிறார் கல்வி அமைச்சர்

மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவைஇரண்டுமடங்காக அதிகரிப்பதே தமது நிலைப்பாடு. அது தொடர்பில் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஜகத்குமார சுமித்ராரச்சி எம்.பி. எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

மஹாபொல புலமைப் பரிசிலுக்கான நிதி லொத்தர் சீட்டு விற்பனை மூலமே கொள் ளப்படுகிறது. லொத்தர் சீட்டின் விலைஒரேயடியாக40ரூபாவாக அதிகரிக்கப்பட்டதால் அதன் விற்பனையில் சற்று வீழ்ச்சி காணப்படுகின்றது. எனினும் படிப்படியாக அதன் விற்பனை தற்போது முன்னேறி வருகிறது.

மஹாபொலபுலமைப்பரிசிலை அறிமுகப்படுத்தியவர் முன்னாள் அமைச்சர் அத்துலத் முதலிய–ாவார். எவ்வாறாயினும்தற்போது வழங்கும் புலமைப் பரிசில் நிதி எந்த வகையிலும் போதாது. அதனை இரண்டு மடங்காக அதி கரிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

பல்கலைக்கழகங்கள் தொடர்பான விடயங்களை முன்னெடுப்பதற்காக உயர்கல்வி ஆணைக்குழு வொன்றை ஸ்தாபிப்பதற்கு இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்த ஆணைக்குழுவில் அரசாங்க பல்கலைக்கழகங்கள் தொடர்பாக தனியான ஒழுங்கு படுத்தலும் தனியார் பல் கலைக்கழகங்கள் தொடர்பாக தனியான ஒழுங்குபடுத்தலும் தொழிற் கல்வி தொடர்பில் தனியான ஒழுங்குபடுத்தலும் மேற்கொள்ளப்படும்.

இவைஅனைத்துதொடர்பிலும் தரநிர்ணயம்மேற்கொள்வதற்கான தனியான நிறுவனம் ஒன்றும் அமைக்கப்படும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர் வரும் 5 அல்லது 10 வருடங்களில் உயர் கல்வியில் பல்வேறு மாற்றங்களைஎதிர்பார்க்கமுடியும். -என்றார். (05)

# பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 3 பேர் தெஹிவளைப் பகுதியில் கைது

தெகிவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் திஸ்ஸமகாராம மற்றும் கொழும்பு 14 பிரதேசங்களை சேர்ந்த 26 மற்றும் 46 வயதுடையவர்கள் ஆவர்.

இவர்கள் தெகிவளையில் மூன்று வீடுகளை உடைத்து கொள்ளையிட்டமை, நபரொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியமை, கொகுவலவில் பண அபகரிப்புக்களை மேற்கொண்டமை மற்றும் நபரொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியமை ஆகிய பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய–வர்கள் ஆவர்.

தெகிவளை மற்றும் கொகுவெல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் 13 கிராம் 600 மில்லிகிராம் நிறையுடையஜஸ்போதைப்பொருள், வங்கிக்கணக்கு அட்டைகள் மற்றும் பித்தளை சிலை ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெகிவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நீரில் அடித்து செல்லப்பட்டவர் பொலன்னறுவையில் இறப்பு

பொலன்னறுவை - சிரிபுர பிரதேசத்தில் நுவரகல ஏரிக்கு நீர் வழங்கப்படும் கால்வாயில் அடித்து செல்லப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார் என சிரிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறுஉயிரிழந்தவர்நுவரகல பிரதேசத்தை சேர்ந்த 43 வய–துடையவராவார். இவரது சடலம் பொலன்னறுவைவைத்தியசாலையில் பிரேதஅறையில்வைக்கப்பட்டுள்ளதாக சிரிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சிரி புர பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (05)

# வரி நீக்கம்

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பழங்கள், வெண்ணெய், பாலுற்பத்தி பொருள்கள் பலவற்றின் தீர்வை வரி நீக்கப்பட்டுள்ளது. டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில், நிதியமைச்சு இதற்கான வர்த்தமானியை வெளியிட்டுள்ளது.

சல்மன் மீன், தோடம்பழம், முந்திரிகைப்பழம், யோக்கர்ட், அப்பிள்பழம், வெண்ணெய் உள்ளிட்ட பாலுற்பத்திகள், பேரீச்சம்பழம் போன்றவற்றுக்கான வரி இவ்வாறு நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ். இந்துக் கல்லூரியில் உயர்தரப் பிரிவில் இணைய வெளிமாவட்ட மாணவர்களிடம் விண்ணப்பம் கோரல்

*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர உயர் தரம் 2025 இல் இணைவதற்கு வெளி மாவட்ட மாணவர்களிடமிருந்து விண்ணப்பம்கோரப்பட்டுள்ளது.*

*2022 க.பொ.த சாதாரண தர பரீட்சையில் உயர் புள்ளிகளை பெற்று சித்தியடைந்தவர்களை க.பொ.த உயர்தரம் 2025 ஆம் ஆண்டுக்கு இணைந்து கொள்வதற்கு யாழ் இந்துக் கல்லூரி உத்தியோகபூர்வமாக முகநூல் ஊடாக அழைப்பு விடுத்துள்ளது.*

*விஞ்ஞானபிரிவில்கல்விகற்க முன்னுரிமை அடிப்படையில் மலையகம் மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு விடுதி வசதி மற்றும் ஏனைய பொருளாதார வசதிகளும் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*யாழ்.இந்துக் கல்லூரியின் உத்தியோகபூர்வமுகநூல்பக்கத்தினூடாகவிண்ணப்பங்களுக்கான இணைப்பை பெற்றுக்கொள்ள முடியும். டிசெம்பர் 08 ஆம் திகதி விண்ணப்பங்களை மேற்கொள்ள வேண்டிய இறுதித் திகதியாகும். மேலதிக தொடர்புகளுக்கு 021-222-2431 மற்றும் 070 211 1764 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும் மின்னஞ்சல் ஊடாகவும் தொடர்புகொள்ள முடியும். (05)*





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியிலும் ஓரவஞ்சனை

## அங்கஜன் இராமநாதன் குற்றச்சாட்டு



வடக்கில் உள்ள அரச தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. ஆனால் அவற்றுக்கு அமைச்சுக்களில் பிரிவுகள் உருவாக்கப்பட்டு தலைவர்கள் நியமிக்கப்பட்டு பெரும்தொகை சம்பளம்,வாகனவசதிகள்வழங்கப்படுகின்றன. இவர்களுக்கு மூடப்பட்ட தொழிற்சாலை கள் மீண்டும் ஆரம்பிக்கும் திட்டம் இல்லை. அபிவிருத்திகளிலும் வேறுப்பாடுகள் இருக்கும் நிலையில் எவ்வாறு நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படும் என நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக, உணவு பாதுகாப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பொருளாதார ரீதியில் ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முக்கியமானது கைத் தொழில்துறை. ஆனால் எமது நாட்டில் இறக்கு மதிப் பொருள்களையே நம்புவதால் கைத்தொழில்துறை ஆரோக்கியமான நிலையில் இல்லை.

அதனால் கைத்தொழித்துறை வீழ்ச்சி யடைந்து செல்கின்றது. தென்பகுதியிலுள்ள கைத்தொழில் துறைகளில் மட்டும் அமைச்சர்கள் அதிக அக்கறை எடுத்து முன்னேற்றுகின்றனர். எனவே விடயத்துடன் சமபந்தப்பட்ட அமைச்சர்களான ரமேஷ் பத்திரன, பிரசன்ன ரணவீர மற்றும் சாமர சம்பத் ஆகியோர் வடக்கு மாகாணம் தொடர்பிலும் அக்கறை செலுத்த வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏராளமானகைத்தொழில்துறைகள் இருந்தன. இப்போது அனைத்தும் செயலிழந்துள்ளன.

குறிப்பாக பரந்தன் இரசாயன தொழிற்சாலையிலிருந்து காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, நீர்வேலி கண்ணாடித்தொழிற்சாலை என்று அலுமினியத்திலிருந்து தேங்காய் எண்ணெய்த் தொழிற்சாலை, ஓட்டுத்தொழிற்சாலை வரை பல தொழிற்சாலைகள் இருந்தன. ஆனால் இன்று இவை இல்லை.

வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தம் முடிந்து 14 வருடங்களாகி விட்டபோதும் இவ்வாறான தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான எந்த வித நடவடிக்கைகளையும் காண முடியவில்லை.

இது ஓரவஞ்சனையைக் காட்டப்படுகிறது . உப்பளம் தொழிற்சாலை மட்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனை விஸ்தரிக்க நாம் பலமுறைகேட்டிருந்தும்இதுவரைநடவடிக்கை இல்லை. இவற்றை ஆரம்பித்தால் எமது மக்களுக்குஏராளமானவேலைவாய்ப்புக்கள் கிடைக்கும். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேலைவாய்ப்புஅவசியம்.

இவற்றுக்கு அரசிடம் நிதி இல்லை என்றால்முதலிடுவதற்குவடக்கு,கிழக்கில் உள்ள பலர் தயாராகவுள்ளனர். ஆனால் இதுதொடர்பில்அரசிற்குஅக்கறைஇல்லை.

இதில் என்ன வேடிக்கை என்றால், அரச தொழிற்சாலைகள் இல்லை ஆனால் அதன் தலைமையகங்கள் மட்டும் உள்ளன. அமைச்சுகளிலும் அதற்கான பிரிவு உள்ளது.

உதாரணமாக காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இல்லை. ஆனால் அதன் தலைமையகம் உள்ளது. பரந்தன் இரசாயன தொழிற்சாலை நிலையும் அது தான் தொழிற்சாலையில்லை .ஆனால் அதற்கு அமைச்சில் ஒரு பிரிவு உள்ளது. ஒரு தலைவர் இருக்கின்றார் . அவருக்கான வாகனம் வழங்கப்படுகின்றது.

வடக்கு,கிழக்கில் வேலைத்திட்டங்கள் நடைபெறுகின்றன என்ற பெயரில் அரசியல் ரீதியாகத் தலைவர் நியமிக்கப்படுகின்றார்.

ஆளணி உள்ளது. அவர்களுக்கு சம்பளம், வாகன வசதிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் தொழிற்சாலைகளும் இல்லை. அவற்றை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளும் இல்லை. இதனால் மக்களின் பணம்வீணடிக்கப்படுகின்றது. அதிலும்வடக்கு, கிழக்கு என்றபெயரில் வீணடிக்கப்படுகின்றது.

இதேவேளை இவ்வாறான அரச தொழிற்சாலைகளைமீண்டும்வடக்கு,கிழக்கில் தொடங்காமல் இருக்க இவர்களுக்கு வேறுதரப்புக்களால் பெருமளவு பணம் வழங்கப்படுவதாகவும் மக்களுக்கு சந்தேகம் உள்ளது. இந்த சந்தேகத்தை இல்லாது செய்யவேண்டுமானால் மீண்டும் அந்த தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முதலீட்டாளர்கள் தேவை என்றால் அவர்களை வழங்க நாம் தயார்.

அவ்வாறு ஆரம்பிக்கப்போவதில்லை என்றால் அவற்றுக்காக அமைச்சுக்களில் உள்ள அலுவலகங்களை மூடிவிட்டு அதன் தலைவர்களை வீட்டுக்கு அனுப்பி விட்டு அந்த பணத்தை வேறு நல்ல திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டும். - என்றார். (05)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி கம்பஹாவில் ஒருவர் சாவு

கம்பஹா -வெயாங்கொட பொலிஸ் பிரிவுக்குஉட்பட்டபகுதியில்கூரியஆயுதத்தால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கம்பஹா - வெல்பொல பிரதேசத்தை சேர்ந்த 36 வயதுடைய வராவார்.

இவர் கடுவஸ்கொட பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்த நிலையில் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்; எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தசம்பவத்துடன்தொடர்புடைய சந்தேக நபர்களை கைதுசெய்யும் நடவடிக்கைகள் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வெயாங்கொடபொலிஸார்ஆரம்பித்துள்ளனர். (05)



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்






4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## பூமியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரினங்களின் வாழ்விடங்கள் அழிவு மற்றும் தீவிர வானிலை முறைகள் ஏற்படும்.

இந்த நிகழ்வுகள் மூலம் கடல் பல்லுயிர்தன்மை, கடல் சார்ந்த உணவுமுறைகள்மற்றும்கடலோர வாழ்வாதாரத்தை சீர்குலைப்பதன் மூலம்நேரடியாகமனிதஉயிர்களை பாதிக்கிறது.

இந்து சமுத்திரத்தை எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பதற்காக நிலைபேறான, அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் மக்களை மையமாகக் கொண்ட பசுமை பொருளாதாரத்தை உறுதிசெய்வதற்காக இந்து சமுத்திரத்திரப் பிராந்திய நாடுகளின் சங்கத்தின் உறுப்பு நாடுகள் மற்றும் பங்காளிகள், அர்பணிப்புடன் செயற்படுவார்கள்.

வெப்ப வலய மற்றும் இந்து சமுத்திரத்தின் ஒன்றிணைவானது கார்பன் வரிசைப்படுத்தலின் மிகப்பெரிய உலகளாவிய ஒன்றிணைவாக மாற்றப்படும்.

எனவே, இது தொடர்பாக பட்டப்பின்படிப்பு வாய்ப்புகளை உருவாக்கும் வகையில், சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவ, ஊழுஊண27 மாநாட்டில் நான் முன்மொழிந்தேன்.

புவி வெப்பமடைதலை 1.5 செல்சியஸாகக்கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு பங்களிக்கும் திறனை மேம்படுத்தல் மற்றும் ஆராய்ச்சியை முன்னெடுத்தல்.' போன்ற நோக்கங்களுக்காகவே காலநிலை மாற்றம் குறித்த சர்வதேச பல்கலைக்கழகம்நிறுவப்படவுள்ளது என்றார்.

## காஸா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தத்தை 18ஆவது திருத்தம் மாற்றியமைத்தது. நாங்கள்19ஆவது திருத்தம் கொண்டு வந்தோம். 20ஆவது திருத்த சட்டமூலத்தை அப்போதைய நீதியமைச்சர் அலி சப்ரி கொண்டுவந்தபோது நான் 25 திருத்தங்களை முன்வைத்தேன். ஆனால், அவர் அவற்றைச் செயற்படுத்தவில்லை. தன்னிச்சையாக செயற்பட்டார். 20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. இறுதியில் நேர்ந்ததுஎன்ன? முழுநாடும்பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டது.

20ஆவதுதிருத்தம்நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையை பலவீனப்படுத்தியது. மூன்று வருடங்களுக்குப் பின்னர் அரசமைப்பின் 19ஆவது திருத்தம் மீண்டும் 21ஆவது திருத்தமாக அமுல்படுத்தப்பட்டது. நீதிமன்ற கட்டமைப்பு சுயாதீனமாக இயங்காவிட்டால் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் நீதிபதிகள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். வரி நீங்கலாக அவர்களுக்கு 10 அல்லது 20 சதவீத சம்பளமே மிகுதியாகுகிறது. நீதிபதிகள்நாட்டை விட்டு வெளியேறுவது பற்றி நீதியமைச்சருக்கோ, ஜனாதிபதிக்கோ அல்லது நாடாளுமன்றத்துக்கோ தீர்மானிக்க முடியாது. பிரதம நீதியரசரே ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். நீதிபதிகள் எதிர்கொண்டுள்ளபிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டும்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் அழுத்தமில்லாமல் செயற்பட வேண்டும் என்பதற்காகவே அரசமைப்புப் பேரவை உருவாக்கப்பட்டது. ஆகவே சகல பிரச்சினைகளுக்கும் பேச்சு ஊடாகத் தீர்வு காணவேண்டும்.

10, 20 யூதர்களுக்காகவே இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு காலப்பகுதியில் பலஸ்தீனத்தில் இஸ்ரேல் என்பதொன்று இருக்கவில்லை. இரண்டாம் உலகப் போரில் 60 இலட்சம் யூதர்களை பலஸ்தீனர்களோ பிற தரப்பினரோ கொல்லவில்லை. இன்று மனித உரிமை பற்றி பேசும் ஐரோப்பியர்களே யூதர்களைக் கொன்றார்கள். இதுவே உண்மை. காஸாவில் போர்க் குற்றங்கள் இடம்பெறுகின்றன. ஆகவே இவ்விடயம் தொடர்பில் இலங்கை ஒரு நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அரசு செல்கிறதா என்பதை நாங்கள் அறியவில்லை. கடந்த காலங்களில் இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் மாத்திரமே முன்வைக்கப்பட்டன. ஆனால், தற்போது பொருளாதாரப் படுகொலை குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. பொருளாதார படுகொலையாளிகள் யார் என்பதை உயர்நீதிமன்றம் தற்போது அறிவித்துள்ளது.

எமது நாட்டின் நீதிமன்றம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முன்னாள் ஜனாதிபதிகளுக்கு கடுமையான தீர்ப்பு வழங்கியுள்ளது என்பதை சர்வதேசத்துக்கு குறிப்பிட முடியும் என்றார்.

## ஊடக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக, 2009ஆம்ஆண்டுயுத்தம் நிறைவுக்கு வரும் வரையில் அதிகாரத்தரப்பின் வன்முறைகளால் 39 ஊடகவியலாளர்களின் இன்னுயிர்களை நாம் இழந்துள்ளோம். அதற்கான நீதி மறுக்கப்பட்ட நிலை



யில் இன்றும் நீதி கோரி போராடி வருகின்ற தரப்பாக நாம் இருக்கின்றோம்.

இதேவேளை மாற்றுக் கருத்துக்களைஒடுக்கும்இந்தஅரசாங்கம், ஊடகங்களைஒடுக்கி, மக்களின் கருத்துச்சுதந்திரத்தைக்கட்டுப்படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது.

அத்துடன், வவுனியாவில் கடமையாற்றிவரும் பிராந்திய ஊடகவியலாளர்கள்தொடர்ச்சியாகப் பொலிஸாரின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

எனவே, ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக ஊடகவியலாளர்கள் ஆகிய நாம் தொடர்ச்சியாகக் குரல் கொடுப்போம் என்பதை அதிகாரத்தரப்புக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். - என்றனர்.

இந்த ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் 'ஊடகசுதந்திரத்தை உறுதிசெய்', 'பொய்வழக்குபோடாதே', 'ஊடகப் படுகொலைகளுக்கு நீதி வேண்டும்', 'கருத்துச் சுதந்திரமே மக்களின் சுதந்திரம்' என்றவாறு கோஷம் எழுப்பினர்.

இப்பேரணி வவுனியா பழைய பஸ் நிலையத்தில் ஆரம்பமாகி வவுனியா தலைமை பொலிஸ் நிலையம்வரைசென்று, அங்கிருந்து மீண்டும்பழைய பஸ்நிலையத்தை அடைந்ததோடு போராட்டம் முற்றுப்பெற்றது.

ஊடகவியலாளர்களுக்கு ஆதரவாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம், புதிய ஜனநாயக மாக்ஸ்சிச லெனினிச கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் வவுனியா வர்த்தக சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி கண்டறியும்சங்கங்கள், போராளிகள் நலன்புரிச் சங்கம், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பு ஆகிய அமைப்புக்களின்முக்கியஸ்தர்களும், மதகுருமார்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.(05)

# சமலின் இரட்டைவேட நடத்தைக்கு சஜித் பிரேமதாஸ சபையில் எதிர்ப்பு



சிறப்புரிமை மீறல் சம்பவம் நடந்தால் உடனடியாக அந்த விவகாரத்தை ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைக் குழுவுக்கு அனுப்புவது சபாநாயகரின் பொறுப்பாகும். ஆனால், சபாநாயகர் அதைச் செய்யாமல், அஜித் ராஜபக்ஷ தலைமையில் ஒரு குழு ஸ்தாபிக்கப்பட்டு, அந்த குழு ஒரு தீர்மானத்துக்கு வந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்த சஜித் மேலும் குறிப்பிடுகையில் -

தமது கருத்துப்படி, ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைக் குழுவுக்கு உதவியாக இந்தக் குழு நியமிக்கப்பட்டு, குழுவில் இருந்து முடிவெடுக்கப்பட்ட பிறகு இந்த தீர்மானம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் குழுவின் ஊடாக நிறைவேற்றப்படவேண்டியிருந்தது.

எனினும், சபாநாயகரால்நியமிக்கப்பட்ட குழுவின் தீர்மானத்தை பொருட்படுத்தாமல், சிறப்புரிமைக் குழு வேறு விதமாக செயற்படுகிறது.

சிறப்புரிமைக் குழுவின் பணிகள் நியாயமானதாகவும், பக்கச்சார்பற்றதாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் இருக்கவேண்டும்.

அஜித் மன்னப்பெரும அவர்கள் செங்கோலை தொட்டதால் ஒரு மாத காலம் நாடாளுமன்றத்தில் தடை விதிக்கப்பட்டது. பொருளாதாரக் குற்றவாளிகள் குறித்து தான் கேள்வி எழுப்பியபோது, தடங்கள் ஏற்படுத்திய நபருக்கு 2 வாரங்கள் மட்டுமே நாடாளுமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது.

எனவே நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹன பண்டார மற்றும் சுஜித் பெரேரா ஆகியோருக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானம் நியாயமற்றது.

அஜித் ராஜபக்ஷ அவர்கள் தலைவராக இருந்த குழு எடுத்துக்கொண்ட தீர்மானத்தில் சிறப்புரிமைக் குழுவின் தலைவராக இருக்கும் சமல் ராஜபக்ஷ கையெழுத்திட்டுள்ளார். இருந்தாலும், அவர் அந்த முடிவை வாபஸ் பெறுவதாகச் சொல்ல வேண்டியிருந்தும், அதையும் அவர் செய்யவில்லை.

எனவே, ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைக் குழுவின் தலைவர் என்ற வகையில் சமல் ராஜபக்ஷ தனியான தீர்மானத்தை அறிவிக்க தார்மீக உரிமை இல்லை எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்த நிகழ்ச்சி நிரலில் உள்ள தீர்மானத்தை வாபஸ் பெற்று, வேறு கலந்துரையாடல்களில் ஈடுபடுமாறும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.(05)

## பிரேசில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மெக்ரோன் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கு இடையிலான இருதரப்புச் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையின் பசுமை பொருளாதார மாற்றம் மற்றும் இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கமான ஐழுசுயு உடனான பிரான்ஸின் தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்வது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அதேநேரம் இலங்கையில் காலநிலை தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு ஒன்றுபடுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மெக்ரோனுக்கு அழைப்பு விடுத்தார்

## வெள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளார்.

சற்று நேரத்தின் பின்னர், பிள்ளையைக் காணவில்லை என்று குடும்பத்தினர் தேட ஆரம்பித்தனர். இந்த சமயத்தில் அந்த வீதியின் ஊடாக புல் வெட்ட சென்ற நபரொருவர் சிறுமியின் சடலத்தை அவதானித்து தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சிறுமி சடலமாக மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக கந்தளாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிம் ஒப்படைக்கப்பட்டு, பத்தாம் கொலனியில் உள்ள அல் அக்ஸா மையவாடியில் நேற்று ஜனாசா நல்லடக்கம் செய்யப்பட்டது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்

# 2,403 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் 9 மாத காலப்பகுதியில் பதிவாகின

## நீதியமைச்சர் விஜயதாஸ தகவல்



நிறைவடைந்த 9 மாத காலப்பகுதிகளில் நாடளாவிய ரீதியில் 2,403 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகியுள்ளன எனவும் இந்நிலைமை கவலைக்குரியதெனவும் நீதியமைச்சர் விஜயதாஸராஜபக்ஷநாடாளுமன்றில் தெரிவித்தார்.

இதேவேளை, நீதிமன்ற கட்டமைப்பில் மாத்திரம் 11,4458 வழக்குகள் நிலுவையில் உள்ளன என நீதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.(05)

# கோடாவுடன் இளைஞன் ஜா - எல பகுதியில் கைது

ஜாஎல - ஏக்கல பிரதேசத்தில் சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட 28 பீப்பாய்களில் 5,040 லீற்றர் கோடாவுடன் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொடுகொட பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடைய இளைஞராவார்.(05)

# ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தவர் கைது

## கடவலையில் 90 ஆயிரம் ரூபா பணத்துடன்

கடவலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்; என கடவலை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் வெல்வெரிய பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடையவராவார்.

கடவலை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குகிடைத்ததகவலின் அடிப்படையில், சந்தேகத்துக்குரிய ஓட்டோவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சோதனையின் போது 12 கிராம் 200 மில்லிகிராம்நிறையுடையஐஸ் போதைப்பொருள், போதைப்பொருள் விற்பனையால் கிடைத்த 90 ஆயிரத்து860ரூபாபணம், டிஜிற்றல் தராசு மற்றும் கைத்தொலைபேசி ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கடவலைபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# மருந்துக் கொள்வனவில் இடம்பெறும் ஊழல், மோசடிகளை தடுக்க ஏற்பாடு

## சீதா அரம்பேபொல தெரிவிப்பு



2024 வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் மூலம் மருந்துகளைக் கொள்முதல் செய்வது தொடர்பான சிறப்பு வழிகாட்டல்களை வெளியிடுவது மற்றும் அதற்காக ஒரு தனி நிறுவனத்தை நிறுவுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், இதன் ஊடாக மருந்து இறக்குமதியில் இடம்பெறும் ஊழல், முறைகேடுகள் மற்றும் ஏனைய சர்ச்சைக்குரிய விடயங்களைத் தடுக்க வழி ஏற்படும் என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் விசேட வைத்தியர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

மேலும், சுகாதாரத் துறையில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் சுகாதார அமைச்சின் மனித வளங்கள், சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் மாற்றங்களைச் செய்ய எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே சுகாதார இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீதா அரம்பேபொல இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல -

தற்போது, நாட்டில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ சிகிச்சை நிலையங்களுக்குத் தேவையான தரமான மருந்துகளை நோயாளிகளுக்கு வழங்குவதில் கவனம் செலுத்தியுள்ளோம்.

தற்போதைய பொருளாதார நிலை காரணமாக சிகிச்சை மற்றும் பராமரிப்பு பணிகளில் சில பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தாலும் அவற்றைத் தவிர்த்து, அடுத்த ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியுதவிகளைக் கொண்டு எதிர்வரும் வருடத்தில் இந்த செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

மேலும், சுகாதார அமைச்சில் பல கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். கடந்த வாரம் சில மாற்றங்களைச் செய்தோம். அடுத்த வாரத்திலும் இதுபோன்ற சில மாற்றங்களைச் செய்யத் தயாராக இருக்கிறோம்.

மேலும், மனித வளங்கள், சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் மாற்றங்களைச் செய்யவும் எதிர்பார்க்கிறோம். மருந்துக் கொள்வனவு செயல்முறையிலும் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன.

குறிப்பாக, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் ஊடாக, மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான விசேட வழிகாட்டுதல்களை வெளியிடுதல் மற்றும் அதற்கென தனியான நிறுவனமொன்றை ஸ்தாபிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், மருந்து இறக்குமதியின் போது இடம்பெறும் ஊழல், முறைகேடுகள் மற்றும் பிற சர்ச்சைக்குரிய சம்பவங்களைத் தவிர்க்க முடியும்.

நாட்டில் உள்ள மருந்துகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், இந்நாட்டில் மருந்துகளை உற்பத்தி செய்தல், அவற்றை சந்தைக்கு அறிமுகப்படுத்தும் பணியை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சுகாதாரத் துறையில் தாக்கம் செலுத்தும் மனித வள மேலாண்மைக்காக பிரபலமற்ற முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. அதற்காக, பதவிகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. இந்த ஒவ்வொரு மாற்றங்களுடனும், தற்போது மருந்துகள் தொடர்பில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று எதிர்பார்க்கின்றோம்.

மேலும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் சில சீர்திருத்தங்களை மேற்கொள்ள தயாராகி வருகிறோம். அனைவருக்கும் ஒரே மாதிரியான சுகாதார சேவையை எவ்வாறு வழங்குவது மற்றும் சமூகப் பாதுகாப்பு வழங்குவது குறித்து உலகில் தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அதற்காக உலக சுகாதார நிறுவனத்துடன் சுகாதார அமைச்சு இணைந்து செயற்பட்டு வருகிறது.

மேலும், தற்போது பெய்து வரும் மழையால் டெங்கு நோய் பரவல் அதிகரித்து வருகிறது. சுகாதாரக் குழுக்களின் முயற்சிகளால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு டெங்கு நோய் இறப்பு விகிதத்தை குறைக்க முடிந்தது. - என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீதா அரம்பேபொல மேலும் தெரிவித்தார். (05)

# இலங்கை மாணவர்கள் 321 பேருக்கு அல்லாமா இக்பால் புலமைப் பரிசில்





இவ்வாண்டு புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் இலங்கை முழுவதும் தெரிவு செய்யப்பட்ட தகுதியான 321 மாணவர்களுக்கு பாகிஸ்தானின் உயர்கல்வியினை தொடர்வதற்கான புலமைப்பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம், பாகிஸ்தான் உயர் கல்வி ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் தகுதியான இலங்கை மாணவர்களுக்கான 'அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் விருது வழங்கல் 2023' நிகழ்வை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

இப்புலமைப்பரிசில் பாகிஸ்தானின் தலைசிறந்த கவிஞரும் தத்துவஞானியுமாக திகழ்ந்த அல்லாமா முஹம்மது இக்பாலின் பெயரில் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுகிறது.

இப்புலமைப்பரிசில் திட்டமானது 2019இல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில், இவ்வாண்டு புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் இலங்கை முழுவதும் தெரிவு செய்யப்பட்ட தகுதியான 321 மாணவர்களுக்கு பாகிஸ்தானின் உயர்கல்வியைத் தொடர்வதற்கான புலமைப்பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன.

அத்துடன், இலங்கையின் திறமையான 357 மாணவர்கள் ஏற்கனவே இப்புலமைப்பரிசிலின் ஊடாக இளமாணி, முதுமாணி மற்றும் கலாநிதி மட்டத்தில் தமது உயர் கல்வியைப் பாகிஸ்தானில் பயின்று வருகின்றனர்.

மேலும், அடுத்த ஆண்டுக்குரிய புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பம் 2024 பெப்ரவரியில் கோரப்படும்.

இந்நிகழ்வில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுநிலை) உமர் ஃபாரூக் பர்கி உரையாற்றும்போது -

பாகிஸ்தான்,-இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கு இடையே நீண்டகால உறவு காணப்படுவதாகவும், பாகிஸ்தானில் கல்வி கற்கும் இலங்கை மாணவர்கள் பாகிஸ்தானியர்களின் விசேட விருந்தினர்கள் என்றும், இம்மாணவர்கள் சிறப்பான முறையில் கண்காணிக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை முழுவதிலும் உள்ள அனைத்து இனத்தவர்களும் பாலினம் மற்றும் சமய வேறுபாடின்றி நியாயமான முறையில் இப்புலமைப்பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணவர்களும் பாகிஸ்தானில் தங்கள் உயர்கல்வியினை வெற்றிகரமாக முடித்து, இலங்கைக்கு திரும்பியதும், அவர்கள் ஒவ்வொருவரையும் பாகிஸ்தானின் தூதுவர்களாக பாகிஸ்தான் கருதுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் விருது வழங்கும் நிகழ்வின்போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உரையாற்றுகையில், பல்வேறு துறைகளில் அல்லாமா இக்பால் புலமைப்பரிசைப் பெறும் அனைத்து மாணவர்களுக்கும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதாகவும், இதுபோன்ற பாகிஸ்தான் அரசின் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிப்பதாகவும், இரு நாட்டு மக்களிடையே நல்லுறவை வளர்க்க எடுக்கப்படும் இவ்வாறான நடவடிக்கைகளை தான் வரவேற்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்தோடு, பாகிஸ்தான் உயர்கல்வி ஆணைக்குழுவின் தலைமைப் பணிப்பாளர் ஆயிா இக்ராம் தனது உரையில், இப்புலமைப்பரிசிலின் குறிக்கோளானது எவ்வாறு மாணவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள் என்பது குறித்தும் பாகிஸ்தானில் உள்ள முன்னணி பல்கலைக்கழகங்களின் உதவியுடன் இலங்கையில் நடைபெறவிருக்கும் கல்விக் கண்காட்சி நிகழ்ச்சி தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

அதனைத் தொடர்ந்து, பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கூறுகையில், பாகிஸ்தானானது எப்போதும் இலங்கைக்கு தொடர்ந்து உதவும், இரு நட்பு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு நிபந்தனையற்ற ஆதரவைத் தொடர்ந்து வழங்கும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இலங்கை பாகிஸ்தான் நாடாளுமன்ற சங்கத்தின் தலைவர், இலங்கை பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, பௌத்த பிக்குகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர். (05)

# கடலில் நீராடிய இளைஞன் எகொடஉயனவில் மாயம்

எகொடஉயன பிரதேசத்தில் கடலில் நீராடிக் கொண்டிருந்த இளைஞன் நீரில் அடித்து செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார் என எகொடஉயன பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காணாமல்போனவர் எகொடஉயன பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞராவார்.

குறித்த இளைஞன் வேலைவாய்ப்புக்கான நேர்முகபரீட்சை ஒன்றிற்கு சென்றுவிட்டு தனது இரண்டு நண்பர்களுடன் கடலில் நீராடிக் கொண்டிருந்த போது நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போனவரை தேடும் பணியில் எகொடஉயன பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எகொடஉயன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




## இளம் பிக்கு ஒருவர் கைது

ஹெரோயின் போதைப்பொருளை பெற்றுக்கொள்வதற்காக காத்திருந்த தேரர் ஒருவர் மத்துகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காலி வஸ்கடுவ பிரதேசத்தை சேர்ந்தவர் இளம் பிக்குவே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இவர் ஹெரோயின்போதைக்குஅடிமையானவர் என மத்துகம பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்தபிக்குஇதற்குமுன்னர்60கிராம் ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்டவர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மத்துகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## விகாராதிபதி கைது

12 வயதுடைய சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக கூறப்படும் தேரர் ஒருவர் யட்டபாத, தினியாவல பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்தபிரதேசத்தில்வசிக்கும்12வயது சிறுவனே இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கைதானவர் அந்தப் பகுதியில் உள்ள விகாரை ஒன்றின் விகாராதிபதி என தினியாவல பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தினியாவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜாஎல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜாஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## பதின்மூன்று வயதான பிக்குவை விகாரையிலிருந்து காணோம்

புலத்சிங்கள ஹல்வத்துர சுதம்வர்தனராம விகாரையில் உள்ள பயிற்சி பெற்ற 13 வயதான பிக்கு ஒருவர் காணாமல் போயுள்ளார் என புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போனவர் அமரகெதர தேவசிறி என்ற 13 வயதுடைய பிக்கு மாணவராவார்.

இவர் கடந்த நவம்பர் மாதம் 21ஆம் திகதி கோவின்னரட்டியால பிரிவேனாவில் கல்வி கற்க சென்ற நிலையில் விகாரைக்கு திரும்பவில்லை என விகாராதிபதி பொலிஸாரிடம் முறைப்பாடுசெய்துள்ளார்.

இந்த பிக்கு தொடர்பான தகவல் கிடைத்தால் 034 228 2292, 077 515 5744, 078 594 395 என்ற இலக்கங்களுக்கு அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாக தெரிவிக்குமாறு புலத்சிங்கள பொலிஸார் பொதுமக்களிடம்கேட்டுக்கொண்டுள்ளனர். (05)

## மகளை துஷ்பிரயோகபடுத்திய இராணுவ ஊழியர் கைதானார்

தனது 12 வயதுடைய மகளை 2 வருடங்களாக பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய நபர் ஒருவர் கொபேகனே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் வன்னிகம, வித்திகுளிய பிரதேசத்தைச்சேர்ந்த 46 வயதுடையவர் ஆவார்.

குறித்த நபர் வவுனியா பம்பைமடு 17 ஆவது காலாட்படை முகாமில் ஊழியராக பணிபுரிபவர் என பொலிஸார் தெரிவித்தனர் .

குறித்த விடயம் தொடர்பில் கொழும்பு சிறுவர்பாதுகாப்பு அதிகார சபைக்குதகவல் கிடைத்ததையடுத்து இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கொபேகனே பொலிஸாருக்கு அறிவித்த நிலையில், சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக நிக்கவரெட்டிய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் நிக்கவரெட்டிய நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

# எச்.ஐ.வி.தொற்றாளர்கள் வவுனியாவில் அதிகரிப்பு!

## வைத்தியநிபுணர் அருள்மொழி பாஸ்கரன் தகவல்

வவுனியா மாவட்டத்தில் 21 எச்.ஐ.வி தொற்றாளர்கள் உள்ளனர் எனவும் இவ்வருடம் 2 புதிய தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் வவுனியா பொது வைத்தியசாலையின் பாலியல் நோய் தடுப்புப் பிரிவின் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திருமதி அருள்மொழி பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச எய்ட்ஸ் தினமான நேற்று வவுனியாபொதுவைத்தியசாலையில்பாலியல் நோய் தடுப்பு பிரிவில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்துஅவர்மேலும்தெரிவிக்கையில்- 'சமூகத்தை வலுப்படுத்துவோம்- எய்ட்ஸ் தடுப்போம்' எனும் தொனிப்பொருளில் 35 ஆவது எய்ட்ஸ்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இலங்கை எச்.ஐ.வி நோய் பரவல் குறைந்த நாடாகவே கருதப்படுகின்றது. இங்குள்ள சனத்தொகை அடிப்படையில் 0.1 வீதத்துக்கு குறைவானவர்களே தொற்றுக்கு உட்பட்டவர்களாக இருக்கின்றார்கள். இதில் 86 விதமான எச்.ஐ.வி தொற்று பாதுகாப்பற்ற உடலுறவின் மூலம் ஏற்படுகின்றது. ஓரினச்சேர்க்கையாளர்கள் கூடிய அளவில் தொற்றுக்குஉள்ளாகிஇருக்கிறார்கள். அவர்கள் குறிப்பாக52வீதமாகக்காணப்படுகின்றார்கள்.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 2002 ஆம் ஆண்டு முதல் 33 எச்.ஐ.வி தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளார்கள். அவர்களில் 19 ஆண்களும் 13 பெண்களும் அடங்குகின்றனர். இதில் 12 பேர் இறந்துள்ளார்கள். தற்போது வவுனியாவில் 21 எச்.ஐ.வி தொற்றாளர்கள் சிகிச்சை சுகதேகிகளாக உள்ளனர். இவர்களில் 12 ஆண்களும், 09 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவ்வருடம் 2 பேர் அடையாளங்கள் காணப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்கள் இருவரும் ஆண்களாகக் காணப்படுகின்றனர்.

2030 இல் எயிட்ஸ் முடிவுக்கு கொண்டு வரும்மகத்தானஇலக்கைநோக்கியமுதலாவது படியாக எச்.ஐ.வி பரிசோதனை உள்ளது. இந்த பரிசோதனையை இலங்கையில் உள்ள அனைத்துஎஸ்டிடிசிகிச்சைநிலையங்களிலும் இலவசமாக செய்ய முடியும். அதன் முடிவுகள் இரகசியமாகவும் பேணப்படும்' இவ்வாறு அருள்மொழி பாஸ்கரன் தெரிவித்துள்ளார். (05)

# 2 கோடியே 22 லட்சம் மக்களின் வரியை மஹிந்தர் வீனடித்தார்

## இரா.சாணக்கியன் சாடல்



மஹிந்தராஜபக்ஷவினர்தமது மாவட்டத்தில் வெல்ல வேண்டும் என்பதற்காக 22 மில்லியன் மக்களின் வரிப்பணத்தினையும் வீணடித்து பல்வேறு அபிவிருத்திகளை அம்பாந்தோட்டையில் செய்துள்ளனர்' எனநாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேசிய ரீதியில் ரயில், அரச மற்றும் தனியார் பஸ் என ஓர் இணைந்த சேவையாக போக்குவரத்து திட்டமிடல் அமைய வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவினுடைய ஆட்சிக் காலத்தில் தேசிய கொள்கை இல்லாமையின் காரணமாக அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட விமான நிலையம், அதிவேகநெடுஞ்சாலை, அதிவேகரயில்போக்குவரத்து என்பன அம்பாந்தோட்டை யில் அமைக்கப் பட்டமையால் இலங்கையின் ஏனையபகுதிகளுக்கு முறையான போக்குவரத்து வசதிகள் அமைக்கப்படவில்லை.

குருணாகல் மாவட்டத்தில் நாமல் ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட்ட போதும் குருணாகல் மாவட்டத்தில் ஒரு அதிவேக நெடுஞ்சாலையைக் கூட அமைக்கவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவினர் எப்போதும் தமது மாவட்டத்தில் வெல்ல வேண்டும் என்பதற்காக 22 மில்லியன் மக்களின் வரிப்பணத்தையும் வீணடித்து பல்வேறு அபிவிருத்திகளை அம்பாந்தோட்டையில் செய்துள்ளனர். தற்போதுரயில்சேவைகளுக்குமாத்திரமேபயணஉத்தரவுச் சீட்டு வழங்கப்படுகின்றது. அதனை பஸ் சேவைகளுக்கும் மிக விரைவில் ஏற்படுத்தித் தர வேண்டும். மேலும் பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் புனரமைக் கப்பட்டு அதில் பணிபுரியும் ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக மாற்றுதல் வேண்டும். அத்துடன் இங்கு பணிபுரிந்து ஓய்வடைந்தவர்களுக்கும் உரிய நேரத்தில் ஓய்வூதியம் வழங்கப்படல் வேண்டும்' இவ்வாறு சாணக்கியன் தெரிவித்துள்ளார். (05)

# நெடுந்தீவுக்கு பயணிகள் படகு வேண்டும் எனக் கோரிக்கை



நெடுந்தீவு மக்களுக்கான போக்குவரத்தைச் சீராக்கும் வகையில் பயணிகள் படகொன்றை வழங்குமாறு இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவிடம் நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்தியசோதி கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வியாழக்கிழமை நெடுந்தீவுக்கான விஜயத்தை மேற்கொண்டுநெடுந்தீவுபிரதேசசெயலகத்தில்நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றார்.

இதன்போதே இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவிடம் நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்தியசோதி குறித்த கோரிக்கையை முன்வைத்தார்.

இதன் போது இந்தியத் தூதுவரிடம் நெடுந்தீவு மக்களுக்கான குடிநீர் தேவையினை சீராக்கும் வகையில்நீர்சுத்திகரிப்புஇயந்திரம்ஒன்றையும்பெற்றுத்தருமாறும் பிரதேச செயலாளர் கோரிக்கையினை முன்வைத்திருந்தார்.

இது தொடர்பான திட்ட வரைபைத் தயாரித்து வழங்குமாறும் , அதனடிப்படையில் இதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதாக இந்திய தூதுவர் வாக்குறுதியளித்தார். (05)

# நீதிமன்றத்தில் இனிமேல் சாட்சிகட கூடு இருக்காது

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

நீதிமன்றங்களில் உள்ள சாட்சி கூண்டுகள் முழுமையாக அகற்றப்படும் என நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதிமன்றம் என்பது பயத்துடனும் சந்தேகத்துடனும் செல்லும் இடமல்ல. நீதிமன்றத்தின் முன் சாட்சியமளிக்கும் அனைவரும் குற்றவாளிகள் அல்லர். சாட்சிகள் நீதித்துறை செயற்பாட்டில் உதவும் குடிமக்கள். எனவே கூண்டில் இருந்து சாட்சியமளிக்கும் 'கூண்டு முறை' மாற்றப்பட்டு, கண்ணியமான முறையில் சாட்சியம் அளிக்கும் முறை இந்த ஆண்டு இறுதிக்குள் தொடங்கப்படும்' என நீதியமைச்சர் தெரிவித்தார். நீதி அமைச்சில் நீதிமன்ற முறைமைக்கு அட்டை கொடுப்பனவு முறையை அறிமுகப்படுத்துவதற்கான உடன்படிக்கையைமக்கள்வங்கியுடன் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்து கொண்டு நீதியமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். (05)

# குடாநாட்டில் 400 குடும்பங்களுக்கு இந்திய தூதுவரால் உணவுப் பொதி

இலங்கைக்கான இந்திய உயரஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று யாழ்ப்பாணத்தில், தெரிவு செய்யப்பட்ட வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கு சுமார் 480 உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் நடைபெற்ற நிகழ்விலேயே குறித்த உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (05)

# இலங்கை இளைஞர்களுக்கு ஜப்பானில் வேலை வாய்ப்பு

இலங்கையின் இளைஞர் யுவதிகளுக்கு முதல் ஜப்பானில் தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் நிர்மாணத்துறையில் தொழில் வாய்ப்புக்கள் இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பான முதற்கட்ட தேர்வுகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர்; குறிப்பிட்டுள்ளார். (05)

# உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நிந்தவூரில் சைக்கிள் ஓட்டப் பவனி

உலகஎயிட்ஸ்தினமானவெள்ளிக்கிழமை நிந்தவூர் ஆதார வைத்தியசாலையால் உலக எயிட்ஸ் தின விழிப்புணர்வூட்டல் சைக்கிளோட்டம் நிந்தவூரில் இடம்பெற்றது.

நிந்தவூர் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.பி. அப்துல் வாஜித் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட குறித்த சைக்கிளோட்ட நிகழ்வில், நிந்தவூர் லிவிங் வெல் அமைப்பின் சைக்கிளோட்ட வீரர்கள் உட்பட பலர் பங்குபற்றியிருந்தனர். (05)

# வவுனியா தமிழ் ம.ம. வித்தியில் 20 மாணவர்களுக்கு '9 ஏ' சித்தி!



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் 20 மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் விசேட சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இதேவேளை 23 மாணவர்கள் 8 பாடங்களில் விசேட சித்திகளையும் பெற்றுள்ளனர்.

ஒன்பது பாடங்களில் விசேட சித்தி பெற்ற 20 பேரில் ஐந்து மாணவர்கள் ஆங்கில மொழி மூலம் பரீட்சை எழுதிய மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.12.2023இல் வெளியிடப்பெற்றது.